வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: நாராயணசாமி

நாள்: 05.10.2024 நேரம்: மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

வடகிழக்கு மாநிலங்கள் நாட்டின் இதயம் மற்றும் ஆன்மா என்று, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் 9.4 கோடி விவசாயிகள் நேரடியாக 20 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு பயனடைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

காந்தி ஜெயந்தியன்று கதர் விற்பனையில் புதிய சாதனை படைக்கப்பட்டு இருப்பது ஊக்கமளிக்கும் வகையில் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி திரைப்பட விழாவில், சிறந்த திரைப்படத்திற்கான சங்கரதாஸ் சுவாமிகள் விருதை குரங்கு பெடல் திரைப்பட இயக்குநர் திரு. கமலக் **கண்ணனு**க்கு முதலமைச்சர் திரு. ரங்கசாமி வழங்கினார்.

------------------------------

தன்கர் (13)

வடகிழக்கு மாநிலங்கள் நாட்டின் இதயம் மற்றும் ஆன்மா என்று, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற தனியார் நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், வடகிழக்கு என்பது வெறும் புவியியல் பகுதி மட்டுமல்ல, இந்தியாவின் சாரத்தை உள்ளடக்கிய கலாச்சாரம்,பாரம்பரியம், மற்றும், இயற்கை அழகு ஆகியவற்றின் சாளரம் என்பதை வலியுறுத்தினார். இந்த பிராந்தியத்தின் வளமான ஆன்மீகம், மற்றும், இயற்கை பாரம்பரியம், துடிப்பான கலாச்சாரம், நேர்த்தியான உணவு வகைகள், மற்றும், மக்களின் ஆற்றல் குறித்தும் அவர் பாராட்டு தெரிவித்தார். அசாமி மொழி,

அண்மையில் செம்மொழிகளில் ஒன்றாக அங்கீகரிக்கப் பட்டதையும் அவர் சுட்டிக் காட்டினார். ஊடகங்கள் குறித்து பேசிய திரு. தன்கர், வடகிழக்கின் தூதர்களாக இருக்கவும், சுற்றுலா மற்றும் மேம்பாட்டில் பிராந்தியத்தின் திறனை வெளிப்படுத்தவும் கேட்டுக் கொண்டார்.

-----------------------------

மோடி 1 (19)

நாடு முழுவதும் 9.4 கோடி விவசாயிகள் நேரடியாக 20 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு பயனடைந்துள்ளனர் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். மஹாராஷ்ட்ர மாநிலம் வாஷிமில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், 23 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு துறைகள் தொடர்பான திட்டங்களை தொடக்கி வைத்து, கிசான் திட்டத்தின் 18ஆவது தவணையையும் வெளியிட்டார். பின்னர் உரையாற்றிய பிரதமர், பழங்குடியினர் சமூகத்தினரின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்க மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக தெரிவித்தார். பஞ்ஜாரா சமூகத்தின் நலனுக்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளையும் அவர் எடுத்துரைத்தார். பஞ்ஜாரா தலைவர்களின் சிறந்த கலாச்சாரம், மற்றும் செழுமையான பாரம்பரியத்தை கொண்டாடும் வகையில், மஹாராஷ்ட்ராவின் வாஷிமில் உள்ள போஹார் தேவியில், பஞ்சாரா விராசத் அருங்காட்சியத்தையும் பிரதமர் திறந்து வைத்தார். இதுபோன்ற சமூகங்களின் வளர்ச்சிக்காக மஹராஷ்ட்ரா அரசு சுமார் 700 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் பிரதமர் கூறினார். இந்த 4 அடுக்கு கொண்ட அருங்காட்சியகத்தில், பஞ்சாரா சமூகத் தலைவர் மற்றும், பஞ்ஜாரா பாரம்பரியத்தை சித்தரிக்கும் 13 காட்சியகங்களும் அமைக்கப் பட்டுள்ளன. வாஷிமில் நடைபெற்ற இந்த விழாவில், வேளாண் உள்கட்டமைப்பு நிதியத்தின் கீழ், ஆயிரத்து 920 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு

மோடி 2 (10)

திட்டங்களை பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணித்தார். மேலும், மஹாராஷ்ட்ராவிற்கு ஒருநாள் பயணம் மேற்கொண்ட பிரதமர், தானேவில் உள்ள முக்கிய மெட்ரோ மற்றும் சாலை திட்டங்களை தொடக்கி வைத்து வேறு பல திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் மத்திய வேளாண் மற்றும் விவசாயத் துறை அமைச்சர்

திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான், அம்மாநில முதலமைச்சர் திரு. ஏக்நாத் ஷிண்டே, மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக வாஷிம் நகருக்கு சென்றடைந்த பிரதமர் திரு. நரேந்திர மோடி, சந்த் செவலால் மகராஜ், மற்றும், சந்த் ராம்ராவ் மகராஜ் ஆகியோரின் நினைவு சின்னங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

------------------------------

*மோடி-காதி* (8)

கதர் விற்பனையில் புதிய சாதனை படைக்கப்பட்டு இருப்பது ஊக்கமளிக்கும் வகையில் உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி புகழாரம் சூட்டி உள்ளார். நாட்டு மக்களிடையே சுதேசி குறித்த விழிப்புணர்வு வேகமாக வளர்ந்து வருவது குறித்தும் அவர் தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். காந்தி ஜெயந்தி அன்று புதுடெல்லியில் உள்ள காதி பவனில், ஒரே நாளில், 2 கோடியே 1 லட்சத்து 37 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் விற்பனையாகி, காதி இந்தியா சாதனைப் படைத்துள்ளது குறித்தும் அவர் பெருமிதம் தெரிவித்தார்.

------------------------------

*ஜெய்சங்கர்* (8)

இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, சீனா, கஜகஸ்தான், கிர்க்கிஸ்தான், தஜகிஸ்தான், மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாடு இம்மாதம் 15,மற்றும 16ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது. ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த உச்சி மாநாடு, இந்த ஆண்டு, பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் நடைபெற உள்ளது. இம்மாநாட்டில் பங்கேற்பதற்காக வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், பாகிஸ்தான் செல்ல உள்ளதாக, வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

------------------------------

*ஹரியானா தேர்தல்* (13 )

ஹரியானா மாநில சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குபதிவு அனைத்து 90 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும், ஒரே கட்டமாக இன்று நடைபெற்றது. பிஜேபி, காங்கிரஸ், ஆம் ஆத்மி கட்சியின்

வேட்பாளர்கள் உட்பட, ஆயிரத்து 31 வேட்பாளர்களின் வெற்றியை 2 கோடியே 3 லட்சம் வாக்காளர்கள், நிர்ணயிக்க உள்ளனர். அங்கு, 20 ஆயிரத்து 632 வாக்குச் சாவடிகளில், பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சுதந்திரமான, நியாயமான மற்றும், சுமுகமான வாக்குப்பதிவை உறுதி செய்வதற்காக, அனைத்து வாக்குச் சாவடிகளிலும் போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்ததாக மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு. பங்கஜ் அகர்வால் கூறினார். மாலை 5 மணி, நிலவரப்படி, 61 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளன. ஜம்மு-காஷ்மீர் தேர்தலில் பதிவான வாக்குகளும், ஹரியானாவில் இன்று பதிவான வாக்குகளும், வரும் 8ஆம் தேதி எண்ணப்பட உள்ளன.

------------------------------

*திரைப்பட விழா - புதுச்சேரி* (12)

புதுச்சேரியில், செய்தி விளம்பரத் துறையும், அலையான்ஸ் பிரான்ஸே மற்றும் நவதர்ஷன் திரைப்பட கழகமும் இணைந்து நடத்தும் 5 நாள் இந்திய திரைப்பட விழா 2023, அலையான்ஸ் பிரான்சே கலையரங்கில் நேற்று துவங்கியது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக முதலமைச்சர் திரு. ரங்கசாமி கலந்து கொண்டு, 2022ஆம் ஆண்டின் சிறந்த திரைப்படத்திற்கான சங்கரதாஸ் சுவாமிகள் விருதையும், 1 லட்சம் ரூபாய்க்கான காசோலையையும், குரங்கு பெடல் திரைப்பட இயக்குநர் திரு. **கமலக் கண்ணனு**க்கு வழங்கினார். வரும் 8ஆம் தேதி வரை நடைபெறும் விழாவில் இன்று, தெலுங்கு மொழி திரைப்படமும், நாளை 6ஆம் தேதி மலையாள மொழி திரைப்படமும், 7ஆம் தேதி வங்க மொழிப் படமும், இறுதி நாளான 8ஆம் தேதியன்று ஹிந்தி மொழிப் படமும் மாலை 6 மணிக்கு, இலவசமாக திரையிடப்படுகிறது.

------------------------------

*கர்லிங் – புதுச்சேரி* (15)

கர்லிங் பெடரேஷன் ஆப் இந்தியா மற்றும் கர்லிங் புதுச்சேரி சார்பில், புதுச்சேரி ராஜீவ் காந்தி உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற 3ஆவது தேசிய கர்லிங் சேம்பியன் ஷிப் போட்டியில், 500 விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர். இப்போட்டியில் ஹரியானா, சிக்கிம், மனிப்பூர், அருணாச்சல பிரதேசம், ஹிமாச்சல பிரதேசம், மத்திய பிரதேசம், தமிழ்நாடு, ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா உள்ளிட்ட 22 மாநிலங்களை சேர்ந்த வீரர்கள் பங்கேற்றனர். 2 நாட்கள் நடைபெற்ற

இப்போட்டியில் ஜூனியர் பிரிவில் ஆந்திர மாநிலம் முதலிடத்தையும், சப் ஜூனியர் பிரிவில் தமிழகம் 2ஆம் இடத்தையும் பிடித்தன. இதேப்போல் பெண்கள் பிரிவில், புதுச்சேரி அணி தங்கப் பதக்கத்தையும், ஆந்திர அணி வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றன. ஒட்டுமொத்த சேம்பியன் பட்டத்தை ஹரியானா அணி தட்டிச் சென்றது. போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு விருதுகளையும், கோப்பைகளையும் முதலமைச்சர் திரு. ரங்கசாமி வழங்கி கவுரவித்தார். நிகழ்ச்சியில் உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், அரசுத் துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

-------------------------------

*பிரல்ஹாத் ஜோஷி (11)*

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி, 3 நாள் பயணமாக நாளை ஜெர்மனி செல்கிறார். இந்த பயணத்தின் போது, ஹம்பர்க் நிலைத் தன்மை மாநாட்டில் அவர் கலந்து கொள்கிறார். நிலையான வளர்ச்சி, பசுமை ஹைட்ரஜன், குறைந்த விலை நிதி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மதிப்புச் சங்கிலி ஆகியவற்றில் ஒத்துழைப்பை அதிகரிக்க ஜெர்மனி,இங்கிலாந்து அமைச்சர்கள் மற்றும் பிற மூத்த அதிகாரிகளுடன் இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்துகிறார். இந்தியா-ஜெர்மனி உறவுகளை வலுப்படுத்துவது, வர்த்தக வாய்ப்புகளை உருவாக்குவது, இந்தியாவிலும், உலக அளவிலும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் விரிவாக்கத்தை விரைவுப்படுத்துவது உள்ளிட்டவை குறித்தும், இம்மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது.

-------------------------------

*வான் சாகசம் (11)*

இந்திய விமானப் படையின் 92ஆவது நிறுவன நாளை முன்னிட்டு, நாளை 6ஆம் தேதி சென்னை மெரீனா கடற்கரையில், வான் சாகச நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. இந்த சாகச நிகழ்ச்சியை காண முக்கிய பிரமுகர்கள் மற்றும் லட்சக்கணக்கான பொது மக்கள் மெரீனா கடற்கரைக்கு வருவதை முன்னிட்டு, சென்னை பெருநகர காவல் துறையின் சார்பாக விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாக சென்னை காவல் ஆணையர் திரு. அருண் தெரிவித்துள்ளார். 6 ஆயிரத்து 500 காவலர்கள் மற்றும் ஆயிரத்து 500 ஊர்காவல் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளதாகவும் அவர்

கூறியுள்ளார். வரும் 8ஆம் தேதி, தாம்பரம் விமானப் படை நிலையத்தில், பிரதான, நிறுவன நாள் விழா நடைபெறும் என்றும், விமானப் படை அறிவித்துள்ளது.

-------------------------------

*கடற்படை (10)*

மலபார் 2024 எனும், பலதரப்பு கடற்படை பயிற்சி, கடல்சார் பயிற்சி, வரும் 8ஆம் தேதி விசாகப்பட்டினத்தில் தொடங்க உள்ளது. இந்தியா நடத்தும் இந்த பயிற்சியில் ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் பங்கேற்க உள்ளன. இந்நிகழ்ச்சியில், சிறப்பு நடவடிக்கைகள், மேற்பரப்பு, வான் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு குறித்த விவாதங்கள், மற்றும், செயல்பாடுகளில் கவனம் செலுத்தப்படும் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஏவுகணை அழிப்பான்கள், பல்நோக்கு போர்க் கப்பல்கள், நீர் மூழ்கிக் கப்பல்கள், எம்ஆர் போர் விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் உட்பட பல்வேறு கடற்படை தளங்கள் இதில் இடம்பெற உள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

-------------------------------

*விளையாட்டு – துப்பாக்கி (8)*

உலக ஜுனியர் துப்பாக்கி சுடும் சேம்பியன் ஷிப் போட்டியில இந்தியா, 2 தங்கம், 1 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்கள் வென்றுள்ளது. பெருவின் நிமாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில், மகளிர் 25 மீட்டர் பிரிவில், இந்தியாவின் திவான் ஷி, தங்கப் பதக்கத்தையும், பரிஷா குப்தா, வெள்ளிப் பதக்கத்தையும், மான்வி ஜெயின் வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளனர். ஆடவர் 25 மீட்டர் பிரிவில், சுராஜ் ஷர்மா, தங்கப் பதக்கதையும், முகேஷ் நிலா வள்ளி வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். இப்போட்டியில் இதுவரை, இந்தியா 13 தங்கம், 2 வெள்ளி, 6 வெண்கலப் பதக்கங்களை பெற்று, பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

-------------------------------

*ரஃக்பி-விளையாட்டு (5)*

ஆசிய ரஃக்பி சேம்பியன் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா, இறுதி ஆட்டத்திற்கு முன்னேறி உள்ளது. நேபாளத்தின் காட்மண்டுவில்

நடைபெற்று வரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா, 24க்கு 7 என்ற புள்ளிக் கணக்கில் குவாமை வென்றது. இறுதி ஆட்டத்தில் இந்தியா-பிலிப்பைன்சை எதிர்கொள்கிறது.

-------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

வடகிழக்கு மாநிலங்கள் நாட்டின் இதயம் மற்றும் ஆன்மா என்று, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் 9.4 கோடி விவசாயிகள் நேரடியாக 20 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு பயனடைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

காந்தி ஜெயந்தியன்று கதர் விற்பனையில் புதிய சாதனை படைக்கப்பட்டு இருப்பது ஊக்கமளிக்கும் வகையில் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி திரைப்பட விழாவில், சிறந்த திரைப்படத்திற்கான சங்கரதாஸ் சுவாமிகள் விருதை குரங்கு பெடல் திரைப்பட இயக்குநர் திரு. **கமலக் கண்ணனு**க்கு முதலமைச்சர் திரு. ரங்கசாமி வழங்கினார்.